**செய்தி வெளியீடு எண் :407** **நாள்: 15.03.2022**

## செய்தி வெளியீடு

"தேசிய வாக்காளர் விழிப்புணர்வு போட்டி தொடர்பான உங்களுடைய புதுமையான படைப்புகளை அனுப்பி விட்டீர்களா?" அனுப்பவில்லையெனில் கவலை வேண்டாம். நீங்கள், உங்கள் பதிவுகளை மார்ச் 31, 2022 வரை அனுப்பலாம்.

இந்திய தேர்தல் ஆணையமானது தேசிய அளவிலான வாக்காளர் விழிப்புணர்வு போட்டியினை கீழ்க்கண்ட தலைப்புகளில் நடத்தி வருகிறது:

1. வினாடி வினாப் போட்டி
2. காணொலிக் காட்சி (video) தயாரிக்கும் போட்டி
3. பாட்டுப் போட்டி
4. விளம்பரப்பட வடிவமைப்பு போட்டி
5. வாசகம் எழுதுதல் போட்டி

இதில் வாக்காளர்கள் தங்களது திறமைகளை வெளிப்படுத்தும் விதமான பதிவுகளை விளம்பரப் படம், காணொலிக் காட்சி, பாடல்கள் மற்றும் வாசகங்கள் போன்ற வடிவத்தில் voter–contest@eci.gov.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பலாம். சிறந்த பதிவுகளுக்கு அற்புதமான பணப்பரிசுகள் மற்றும் பரிசுப்பொருட்கள் வழங்கப்படும். இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான கடைசி தேதி 31.03.2022 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. மேலும், தகவல்களைப் பெறுவதற்கு "**https://ecisveep.nic.in/contest/**" என்ற இணையதளத்தைக் காணலாம். உங்களுடைய புதுமையான படைப்புகளை இதுவரை அனுப்பவில்லையெனில் கவலை வேண்டாம் 31 மார்ச், 2022–க்குள் அனுப்பவும். இந்த அரிய வாய்ப்பினை தவறவிடாதீர்கள்.

தலைமைத் தேர்தல் அதிகாரி மற்றும்
அரசு முதன்மைச் செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**